உ
சிவமயம்

REGISTERED AS A NEWSPAPER IN CEYLON P. M. G. No. H. A. 19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலே மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ௫௯] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஸ்ரீ கார்த்திகை மீ ௧௨ உ (1947 நவம்பர் 28 வெள்ளிக்கிழமை) [ இல ௬௪


## ஆலயங்கள்


வித்துவான், திரு. ந. சிவப்பிரகாச தேசிகர் அவர்கள்


ஆலயம் தொழுவது சாலவும் நன்று

இது நல்லிசைப் புலமை வாய்ந்த மெல்லியலாராகிய ஒளவைப் பிராட்டியார் அருளிய நீதிமொழிகளில் ஒன்று. இது "கொன்றைவேந்தன்" என்னும் நூலின் 2-ம் சூத்திரமாகும். மிக்க இளஞ் சிறார்களின் உள்ளத்தே உயர்ந்த நீதிகளைப் பதிய வைக்கவேண்டும் என்னும் பெருங் கருணையுடன் இயற்றப்பட்டது இந் நூலாகும். பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியத்துக்கு உரைகண்ட பேராசிரியர்களால் மேற்கோளாகக் கொள்ளப்பட்ட நூல்களில் இதுவும் ஒன்றாகும். இதன் சூத்திரங்கள் உருவிற் சிறியனவாயிருந்தும் ஆழ்ந்தகன்ற அருங்கருத்துக்களைக்கொண்டு விளங்குகின்றன.

இதன்பொருள்:— ஆலயத்துக்குச் சென்று இறைவனை வழிபடுவது மிகவும் நல்லது என்பதாம்.

ஆலயம்—கோயில். ஆ—ஆன்மாக்கள், லயம்—ஒடுங்குமிடம், பசுபோதம் ஒடுங்கப்பெறும் இடம் என்பது கருத்து. இச்சொல் ஆகுபெயர்ப் பொருளால் ஆண்டு உறையும் இறைவனைக் குறிக்கும், அன்றி, "ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" (சிவஞான சூத். 12) என்றபடி இயற்பெயர்ப் பொருளாய்க் கோயிலையே குறித்ததுமாகும். இங்ஙனம் ஆலயத்தையே அரனாகக் கருதி வழிபடு முறை, ஆகமங்களிலும் அங்ஙனம் வழிபட்ட சமயாசாரியர் வரலாறுகளிலும்காணப்படுதல் அறியத்தக்கது. இச்சூத்திரத்தில் அமைந்துள்ள சொற்சீர்கள் நான்கும், இறைவனை வழிபடும் நெறிகள் நான்காகும் என்பதைக் குறிப்பனவாம். அவை, 1சரியை 2கிரியை 3 யோகம், 4 ஞானம் என்பன. "நாற்சீரின் நானெறி விளக்கி" (சே. பிள்.) என்பதுங் காண்க. இனி, இதன்கண் அமைந்துகிடந்த எழுத்துக்களையும் நோக்குவோம். அவை 15 ஆக உள்ளன, ஒற்றெழுத்துக்கள் அலகிடப் பெறுவதில்லை. ஆதலின் மெய்கள்மூன்றையும் நீக்கின் 12 எழுத்துக்களேயுள்ளன. இவை, சிவஞான போதம் 12-ம் சூத்திரத்தை ஞாபகப்படுத்துவதுடன், அதன் முடிவாகிய "ஆலயந்தானும அரனெனத் தொழுமே" என்பதனுடன் எழுத்தாலும், சீராலும், பொருளாலும் ஒளவொத்திருத்தலுங் காண்க. ஆலயம் என்றதனுனே பதியும், தொழுவது என்றதனுனே வினை முதலாகிய பசுவும், நன்று என்றதனுனே பாச நீக்கமும், சிவத்துவப் பேறும் அடங்கியிருத்தல் அறியலாம்.

இனி ஆலயமும் பலவகைப்படும். அவை: 1 தேவாலயம், 2 மடாலயம், 3 வித்யாலயம், 4 அண்டாலயம, 5 பிண்டாலயம் முதற் பலவாம். "படமாடுங் கோயில்....நடமாடுங்கோயில்" "உள்ளம் பெருங்கோயில்", "நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்", "காயமே கோயிலாக", "மறவாமை யானமைத்த மனக்கோயில்" என்பனவாக வரும் ஆன்றோர் அருண்மொழிகளும் இவற்றை விளக்கு வனவாம். தொழும்நெறியும் பலவாம் அவை 1 தாசமார்க்கம், 2 சத்புத்திரமார்க்கம், 3 சகமார்க்கம், 4 சன்மார்க்கம் முதலியன. இங்ஙனம்வழிபாடாற்றிய உயிர்கள்பெறும் பதமும் பலவாம். அவை, 1 சாலோகம்: 2 சாமீபம், 3 சாரூபம் 4 சாயுச்யம் என்பன. இவற்றின் விரிவினை ஞான நூல்களான் அறியத்தக்கன.

இனி, இறைவன் உள்ளம், உரை, உடல்களுக்கு எட்டாதவன். "மாற்ற மனங்கழிய நின்றோன்" என்பது தமிழ்மறை: ஆதலின் முதல்வனை உள்ளத்தால் சிந்திக்கவும், உரைகளான் அறியவும், கண்களாற் காணவும் இயலாது. இக்கருவிகள் யாவும் மாயையின் சம்பந்தமானவை. இறைவன் மாயையிற் றோய்பவன் அல்லன். மாயைக்கு அப்பாற்பட்டவன். ஆதலின், அவை கடவுளைக் காணுங் கருவிகளாகா. கடவுளின் முன்னிலையில் இக்கருவிகள் முனைத்து நில்லா. ஒளி முன் இருள்போலாகும். ஒளியைக் காணுதற்கு இருள் துணையாகாது. அதுபோலப் பதியைக் காணுதற்குப் பாசக் கருவிகள் துணையாகா. இவை மாயாகாரியப் பொருள்களையே அறியவல்லனவாகும்

இனி, ஒளியைக் காணுதற்கு ஒளியுடைப் பொருளே துணையாவது போல, ஞானமே உருவாகிய இறைவனை அறிதற்கும் ஞானமே கருவியாதல் வேண்டும். இதுபற்றியே ஞான நூல்களில் இறைவனைப்பற்றிப் பேசுமிடத்து, "வாங்மனாதீத கோசர வஸ்து", "உரைக்கும் உள்ளத்திற்கும் எட்டாததும், அறிவுக்கு எட்டுவதுமான பொருளாயுள்ளவன்" இறைவன் என்று கூறுகின்றது. வாக்கும் மனமும் கோசாமும் முறையே பாச ஞான. பசுஞான, பதிஞானங்களாகும். எனவே, இறைவன் பாசஞான பசுஞானங்களானன்றி, சிவஞானத்தால் அறியப்படுபவன் என்பது போதரும்.

முதல்வனுக்கு உருவில்லை; வடிவில்லை; உலகில்லை. ஆதலின் அவனை ஓர் உருவாக அமைத்துக் கண்களாற் காணவும், உளத்தாற்கருதவும், மறை முதலிய கலைகளான் அறியவும் முடியாது. கருத முயன்றாலும் அகப்படுபவன் அல்லன். "மைப்படிந்த கண்ணாளும்", "மறையினாலயனால்" என்பனவாதியாக வரூஉம் ஆன்றோர் வாக்காலும் இஃதறியலாம்.

இனி, உயிர் அறிவுப் பொருளாயினும் தானே தனித்துநின்று விளங்காது துணைகொண்டே விளங்கும். கண் ஒளிப் பொருளாயினும் தானே காணாது; தீயொளி ஞாயிற்றின் ஒளி முதலியவற்றானே விளங்குவதாம். அதுபோலவே உயிரும் பெத்தத்தில் மாயா கருவிகளானும், முத்தியில் முதல்வன் அருளானும் விளக்கம் பெறும். ஞாயிறு ஒளிப்பிழம்பாயினும் அந்தகன் அதனைக் காணுவாறுபோல இறைவன் ஒளிப் பிழம்பாயினும், மாயையின் மறைப்பால் உயிர் அவனைக் காணமாட்டாது. ஞாயிற்றின் ஒளியை [illegible]

[illegible]

### பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

மணந்திகழ் திசைக ளெட்டுமே ழிசையு மலியுமர் றங்கமை வேள்வி
இணைந்தநால் வேத மூன்றெரி யிரண்டு பிறப்பென வொருமையா லுணரும்
குணங்களு மவற்றின் கொள்பொருள் குற்ற மற்றவை யுற்றது மெல்லாம்
உணர்ந்தவர் வாழும் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே.

—திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

### வெங்காயம் கிடைக்கும்

### ஆனால் வர்த்தகரின் கெடுபிடி

இலங்கையில் வெங்காயம் மிகவும் தட்டுப்பாடான நிலைமையில் இருக்கிறது. வர்த்தகர்கள் சோரமாக இருத்தல் 1 ரூபாவரையில் விற்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆனால் இந்நிலைமை இன்னும் அநேக நாட்களுக்கு நீடிக்கமாட்டாது; கூடிய சீக்கிரம்-அதாவது இன்னும் ஓர்மாதத்துக்கிடையில் இந்தியாவிலிருந்து 800 தொன் வெங்காயம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெங்காயத்தை இறக்குமதி செய்தற்கான அநுமதிப்பத்திரம் வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த வர்த்தகர்கள் அப்படி இறக்குமதி செய்யப் பின்னிற்கிறார்கள். உணவுப்பகுதி யதிகாரி ஸ்ரீ கே. ஆள்வாப்பிள்ளை இன்ன விலைக்குத்தான் விற்கவேண்டுமென்று கட்டளையிட்டது இந்த வர்த்தகர்களுக்கு விருப்பமில்லையாம். தாம் நினைத்தபடி விற்க இவ்வர்த்தகர்கள் விரும்புவதாகத் தெரிகிறது. அந்த அந்தரங்க நோக்கத்தைக் கொண்டே அவர்கள் வெங்காயம் இறக்குமதி செய்ய தாமதம் செய்கிறார்களாம். அவர்கள் இனியும் தாமதித்தால் தக்க நடைவடிக்கை எடுத்து, அவ்வளவு வெங்காயத்தையும் அரசாங்கம தானே நேரே இறக்குமதி செய்யும். ஆனால் இன்னும் இரண்டொரு தினங்களில், குறித்த வாத்தகர்கள் தம் பிடிவாதத்தை விடுத்துக் கீழே இறங்கிவருவர் என நம்பப்படுகிறது.

அடுத்த ஆண்டு தொடக்கமாக மாதந்தோறும் 1000 தொன் வெங்காயம் இந்தியாவில் இருந்து கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சிறந்த இராஜதந்திரியாம்

### பிரதமர்க்கு லண்டன் பத்திரிகை பாராட்டு

இலங்கைப்பிரதமர் மிஸ்ரர் டி.எஸ். சேனநாயக்கா, உறுதியான மனப்பான்மையும, திடசித்தமும்கொண்ட சிறந்த இராஜதந்திரி யென்று லண்டனிற் பிரசுரமாகும் "ஒப்ஸேர்வர்" பத்திரிகை, ஆசிரியர் கூற்றாகக் கூறுகிறது. இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழுங்கப்படுவது சம்பந்தமாக அப்பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:-

"கடந்த யுத்தத்திலே, இலங்கை, இங்கிலாந்துடன் மனப்பூர்வமாக ஒத்துழைத்தது. சுதந்திரம்பெற்ற பின்னும் அப்படியான ஒத்துழைப்பை இலங்கை அளிக்கும என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு.

"இலங்கை டொமினியின் அந்தஸ்தாம் சுபராஜ்யம் பெற்றதே ஓர் தனிச்சிறப்பானது. அது திடீரென


தொடர்ச்சி 4-ம் பக்கம்


## இளவரசி விவாகம்

### ருஷியாவின் மவுனம்

பிரிட்டிஷ் மன்னர் தம்பதிகளின் சிரேட்ட குமாரத்தி எலிசபெத் இளவரசிக்கும், லெப்டினன்ட் மவுன்ற பேற்றனுக்கும் நடந்த விவாகத்தை ஒட்டிய சகல செய்திகளையும் உலக நாடுகள் எல்லாம் பகிரங்கப்படுத்தின. ஆனால் ருஷியா மாத்திரம் இவ் விஷயத்தில் மவுனம் சாதித்தது. அது உத்தியோக பூர்வமாக எந்த விதமான அறிக்கையும் விடவில்லை. உலகிலேயுள்ள எல்லா நாடுகளும் இளவரசியின் விவாகத்தின்போது பலவிதமான சன்மானங்கள் அனுப்பித் தம் சந்தோஷத்தையும் பாராட்டையும் தெரிவித்தன. ஆனால் ருஷியா அப்படியான ஓர் சன்மானத்தை யாவது அனுப்பவில்லை இதன் பயனாக பிரிட்டிஷ் பொதுமக்கள் இன்று ருஷியாமீது, இதுவரைபோன்று [illegible] உடையவராக இருக்க [illegible] இளவரசியின் விவாகத்தை ருஷியர் அவமதித்தனர் என்றே இங்கிலாந்தில் உள்ள சாதாரண மக்கள் கருதத் தொடங்கிவிட்டனர்.

பிரிட்டிஷ் பொதுஜனங்கள் எதனையும் சகிப்பர்; ஆனால் தம் மன்னர் குடும்பத்தை யாரும் அவமரியாதை செய்தால் அதனைக் கடைசிவரை சகிக்கமாட்டார்கள்.

எலிசபெத் விவாகதினத்தன்று, விவாக வைபவம் நடந்த தேவாலயத்துக்குப் பலநாட்டுப் பிரதிநிதிகளும் விஜயம் செய்தனர், அப் பிரதிநிதிகளின் மோட்டார்ரதம் வந்துநின்றபோதெல்லாம், இவ் வைபவத்தைப் பார்க்கவந்திருந்த பிரிட்டிஷ் பொதுஜனங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். ஆனால் ருஷியக்கொடி தரித்த ஓர் கார் அங்கேவந்து நின்றதும், எவ்வித சந்தோஷ ஆரவாரமும் செய்யாமல் அவர்கள் மவுனமாய் நின்று தம் அதிருப்தியைத் தெரிவித்தனராம்.

இவ்விஷயத்தில் சோவியத்ருஷியா கொண்டிருந்த மனப்பான்மையை பிரிட்டிஷார் மிகவும் வெறுக்கிறார்களாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஞு
கார்த்திகை கங உ வெள்ளிக்கிழமை

## விடுமுறை நாட்களை வீண் போக்குவதா?

அடுத்து வருவதாகிய டிஸெம்பர் மாசம் உலகத்திலே எந்நாட்டினருக்கும் எச்சாதியினருக்கும் எம்மதத்தினர்க்கும் பெரும்பான்மையும் ஒய்வுக்குரிய விடுமுறை நாட்களோடு கூடியதாகும். சைவ வைஷ்ணவ சமய மக்களுக்கும், கிறீஸ்தவர்களுக்கும் இந்த டிசம்பர் மாசத்திற் பல நாட்கள் சமய வழிபாட்டின் பொருட்டும் வேறும் நல்ல பொதுக் கருமங்களிலும் செலவிடத்தக்க காலமெனலாம்; சைவ மக்களாகிய எங்களுக்கு, டிசெம்பர்மாசத்தை யண்டி யுள்ளதாகிய மார்கழி மாசம், தேவர்களுக்கு ஒருநாள் என்று சொல்லப்படும் மனுஷஆண்டு ஒன்றிலே புலரிக் காலமாகும்; அதனுற்றான் மார்கழி மாசம் முழுவதும் புலரிக்காலத்திற் பூசை திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவையென்னு மிவைகளை ஓதுதல் முதலிய சற்கருமற்கள் நடைபெறுகின்றன; ஆருத்திரா தரிசனமும் மார்கழி மாசத்திற்கே யுரியதாகும்; கிறீஸ்துவர்கட்கும் நத்தார்ப்பெருநாள் இம் மாசத்திலேயே கொண்டாடப் படுவதாகும்;

இப்படியான பலகாரணங்கள் பற்றியே டிசெம்பர் மாசத்திற் சிலவாரம் உத்தியோகத்தர்கட்கும், முழுமாசமும் பள்ளிக்கூட உபாத்தியாயர் மாணுக்கர்களுக்கும் விடுமுறைகாலமாக உதவப்படுதல் வழக்கமாய்விட்ட தெனலாம்; இந்த டிசெம்பர் மாதத்திலே ஆண்டு தோறும் எங்கள் அயல்நாடாகிய இந்தியாவிலே, சமய சம்பந்தமான மகாநாடுகளும், சனசமூக சம்பந்தமான பெருங்கூட்டங்களும், அரசியல் சம்பந்தமான மகா சபைகளுங் கூட்டப்பட்டு நடைபெற்று வருவதையும், அவற்ருற் பெரும் நன்மை யுண்டாயிருப்பதையும் நாங்கள் அநுபவத்திற் கண்டுள்ளோம்.

ஆனல் இந்த இலங்கைநாட்டிலெனிலோ, இப்படியான முயற்சி ஒன்றேனும், இவ்விடுமுறை நாட் காலத்திலாக, வேறு எக்காலத்திலாகச் செய்யப்படுதலைக் காணேம்; இந்த இலங்கை நாடு வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்களுள் இரண்டொன்று தவிர ஏனைய எல்லாவற்றிற்கும் அந்நிய நாட்டையே நம்பியிருப்பது; ஆனதால் கைத் தொழில், விவசாயம், வியாபாரம் என்னு மிவைகள் விஷயமாக இந்நாட்டு மக்கள் சங்கங்கள் கூட்டியும், காலந் தோறும் கைத்தொழில் மகாநாடு, விவசாயிகள் மகாநாடு முதலிய மகாநாடுகளைக் கூட்டி இங்குள்ள மக்களுக்கு இதன் பொருட்டு என்ன செய்யவேண்டும், இப்படிச் செய்யவேண்டுமென்ற வழிவகைகளை எடுத்துக் காட்டுதல் ஆவசியகமல்லவா? எந்தக் கருமத்திற்கும் அரசினரை நாம் நம்பியிருப்பதை விடுத்து, மகாநாடுகளை இப்படியான ஓய்வு நேரங்களிற் கூட்டி நிர்ணயங்களை நிறைவேற்றி, அரசினரைத் துணைபுரியும்படி கேட்டலல்லவா சிறந்த முறையாகும். இங்குள்ள மக்கள், பாராளுமன்றப் பிரதிநிதித்தேர்தற் காலத்திலே தக்க முறையாகவோ, தகாத முறையாகவோ முயற்சிப்பட்டுக் கருமமாற்றினுர்களே; அதன் பின்னர் அரசியற் சீர்திருத்தத்தை உத்தேசித்து, இந்நாட்டு மக்களாக, இம் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக ஏதும் முயற்சி செய்கிறுர்களா? அரசியல் விஷயமாகவேனும் சனசமூக விஷயமாகவேனும் எவையெவை செய்யலாகும், எவையெவை தவிர்க்கப்படவேண்டும் என்பவற்றை, பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் குறித்த டிசெம்பர்மாத காலத்தில் நிகழவிருக்கும் விடுமுறை நாட்களிற் கூட்டங்கூடிப் பரஸ்பரம் உசாவிக் கருமமாற்றினல அதனுல் நன்மையுண்டாகாதா?

இனி, இங்குள்ள சைவமக்களாகிய நாங்கள் எங்கள் சமய விஷயமாகச் செய்யவேண்டிய திருத்தங்கள் பலவுளவெனலாம்; இந்த இலங்கையிலுள்ள பௌத்தர், இஸ்லாமியர், கிறீஸ்தவர் எனப்படும் சமயவாதிகள் தங்கள் தங்கள் சமயத்தை விருத்தியர்க்குதற்கான முயற்சிகளைப் பல்லாற்ருனுஞ் செய்து வருகிருர்கள்; ஆனுற் சைவ நன்மக்களென் றிருக்கும் நாங்களெனிலே, சமயாபிமான மற்றவர்களாய், எம்மதமும் எமக்குச் சம்மதந்தான் என்ற நிலையிற் சீவிக்கத் தலைப்பட்டுக்கொண்டோம்; சைவசமய விருத்திக்குச் சிறந்த சாதனமாக வுள்ள கோயில்களுட் சிலவினுஞ் சிலவொழிய, இங்குள்ள ஏனைய கோவில்கள் எல்லாம் நித்திய நைமித்திகங்கள் சீர்பெற நடத்தலின்றி ஈனநிலையடைந்துள்ளன; கோயில்கள் பலவற்றின் அதிகாரிகளும் அர்ச்சகர்களாகிய பிராமணர்களுஞ் சேர்ந்துகொண்டு குருடனுக்குக் குருடன் வழிகாட்ட முயன்றவாறு இடர்ப்படுகிருர்கள்; பத்தி மார்க்கமான செயல்கள் கோயில்கள்தோறும் அறவே தேய்ந்தொழிய, வியாபார முறையான கருமங்களும், விபரீதமான செயல்களுங் கொள்கைகளும் இப்பொழுது இங்குள்ள பல கோயில்களிலே தலைப்படலாயின; அந்தணரென் றிருப்போரிடத்தாக, ஏனைய சைவமக்களென் றிருப்போரிடத்தாக சமயாபிமானம் பயபத்தி யென்னு மிவைகள் இக்காலத்தில்லாதொழியலாயின; சைவ மக்களிடத்தே சைவசமய சாஸ்திர வுணர்ச்சி குன்றலாயிற்று.

இப்படியெல்லாமிருத்தலால், இந்த விடுமுறைநாட்களில் இங்குள்ள சைவ உபாத்தியாயர்கள் [illegible] வகுப்பிலே கல்வி [illegible] சைவ [illegible]

# உலகம் பலவிதக் கதை

(முற்ருெடர்—40)

**"நீங்கள்தாம் உபாயஞ் சொல்லவேண்டும்"**

யாத்திரைசெய்து மீண்ட சுவாமியாரைக் கண்ணகியம்மை சிவபாக்கியம் இராமன் எல்லோரும் வணங்கி உபசரித்தார்கள்; அவரும் அவர்களுக்குக் கங்கைத் தீர்த்தம் விபூதிப் பிரசாதனம் முதலியன கொடுத்தார்; பாக்கியலட்சுமி தனபாக்கியமென்னு மிவர்கள் சிலநாட்கள் அங்கே வந்து தங்கியிருந்து, சுவாமியார் மீண்டுவருவதையும எதிர்பார்த்துக் காத்திருந்து, வரக்காணுமையால் முதனுளே சிவகுருநாதனைத் துணையாகக் கொண்டு அவ்விருவரும் தாங்கள் வசிக்கும் ஊருக்குப் போனுர்களென்ற செய்தியைக் கண்ணகியம்மை அந்தச் சந்நியாசிக்குச் சொல்லுதலும், அவர் கேட்டு, "இன்னும் இரண்டு மூன்று தினந்தான் பள்ளிக்கூடந் தொடங்குதற்கு இருப்பதால், பாக்கியலட்சுமி தன் கடமையைப் பார்க்கவேண்டுமென்ற காரணத்தினுற் போயிருக்கவேண்டும்; நானும் அதை யுத்தேசித்தே காலதாமசஞ் செய்யாது யாத்திரை முடித்துக் கொண்டு மீண்டுவந்தேன்". என்று சொன்னுர். கண்ணகியம்மை அதன் பின்னர் சுவாமியாருக்குப் போசனம் வழங்கித் தாங்களும் போசனஞ் செய்தனர்; இதற்கிடையில் தன் மைத்துனரைப்பற்றிச் சாமியார் ஏதும் கேள்விப்பட்டதுண்டோவெனச் சாமியாரைக் கேட்கும்படி சிவபாக்கியம் இரகசியமாகத் தங்கள் தாயிடஞ் சொல்ல, கண்ணகியம்மை தன் மருமகனைப்பற்றிச் சுவாமியாரிடம் விசாரித்தாள்; சுவாமியார் உடனே பதில் சொல்லாது சற்றுநேரம் யோசித்துவிட்டுத் தாம், சென்றவிடமெல்லாம் நமசிவாயத்தைப்பற்றி, அவருடைய குணங் குறிகளைச் சொல்லி விசாரித்ததாகவும், அக்குணங்குறியுடையவர் யாரும் எங்கேனும் எதிர்ப்படுகின்ருர்களோ என அவதானித்ததாகவும், ஆனுல் தாம் அவரைப்பற்றிக் கேள்விப்படவில்லை யெனவும், சந்திக்கவில்லை யெனவும், பதில் சொன்னுர். அப்படிச் சொல்லக் கேட்ட மாத்திரத்தே தாயின் பக்கலிலே நின்ற சிவபாக்கியம் முகம்வாட, கண்களில் நீர் ததும்பச் சஞ்சலமுற்றுளாய் அவ்விடத்தைவிட் டகன்று தன்னறையுட் சென்று அங்கிருந்த படுக்கையிற் போய்ப் படுத்துக்கொண்டாள்; மகள் அதிக கவலையோடு அவ்விடத்தைவிட்டுச் சென்றதை யறிந்த கண்ணகியம்மை துயரத்தோடு சுவாமியா

தொடர்ச்சி 5ம் பக்கம்

## தேசாதிபதியின் பிரசாரணம்

பிரிட்டிஷ் அரசியலிலே, பாராளுமன்றத்தை அங்குரார்ப்பணம் செய்யும்போது பிரிட்டிஷ் மன்னர் ஓர் பிரசாரணம் செய்வது சம்பிரதாயம். எந்தக்கட்சி அதிகாரத்தில் இருந்து அரசியலை நிருவகிக்கப்பெற்றுளதோ, அக்கட்சியின் பரிபாலனக் கொள்கையை விளக்குதலே மன்னர்பிரான் பிரசாரணத்தின் நோக்கமாகும். அந்தச் சம்பிரதாயத்தை ஒட்டி, சென்ற செவ்வாய்க்கிழமை இலங்கைப் பாராளுமன்றமும் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம்செய்யப்படுகையில் தேசாதிபதி சேர் மொங் மேஸன்மூர் ஓர் பிரசாரணம் செய்தார், இன்று இலங்கையைப் பரிபாலிக்கும் பொறுப்பை மேற்கொண்ட ஐக்கியதேசியக் கட்சியின் பரிபாலனக் கொள்கையையே தேசாதிபதி அன்று தம் பிரசாரணத்தில் விளக்கினுர் என்க.

தேசாதிபதியின் பிரசாரணம் இலங்கைமக்களுக்கு ஏமாற்றத்தைக்கொடுத்துளது என்றே நாம் பட்டவர்த்தனமாகத் தெரிவிக்கவேண்டும். சர்க்கரை என்றவுடன் நாக்கிலே இனிப்புச் சொட்டாது. அதேபோல, தேசாதிபதியின் பிரசாரணம் சில உயரிய உந்நத லட்சியங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தபோதிலும், அந்த உன்னத லட்சியங்களைப் பூர்த்தியாக்குவதில் எவ்வளவுதூரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்னும் விஷயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் வழக்கமான உறுதியற்றகொள்கையே பெரிதும் காணப்படுகிறது. சுதந்திர பாரத தேசத்திலே, உணவுக்கட்டுப்பாடுகளையும், ஏனைய கட்டுப்பாடுகளையும் தவிர்க்க நேரு அரசாங்கம் தீவிர முயற்சி செய்ய, இங்கே சேனுயக்கா அரசாங்கம் அந்தக் சட்டுப்பாடு [illegible] இறுக்கிப் [illegible] ருக்கவே நிச்சயித்திருக்கிறது என்பது தேசாதிபதியின் பிரசாரணத்தால் அறியக் கிடக்கின்றது. விவசாயத்தை விருத்திசெய்து அதன்மூலம் உணவுப்பொருள் விஷயத்தில் நாட்டுமக்கள் தம் பாதுகாப்புடையோராக இருக்க முயற்சிகள் ஆற்றப்படும்என்று தேசாதிபதிகூறிய மொழிகளை அப்படியே ஏற்க நாம் ஆயத்தமாயில்லை. சென்ற 16 ஆண்டுகளாக, கோடிக்கணக்கான ரூபாய்களை விரயம்செய்து, மின்னேரியாவிலும், பொலனறுவையிலும், காகமத்திலும் றிடியகமத்திலும் விவசாயத்தை விருத்திசெய்ய கையாண்ட முயற்சிகள் இதுவரை என்னுயிற்றுஎன்று கேட்டால் அதற்குத்தக்க மறுமொழி சொல்ல சேனுயக்கா அரசாங்கம் தயங்குகிறது. விவசாயப் பட்டாளத்தின்மூலம நெல் புசல் ஒன்று 125 ரூபா செலவில் விளைவிக்கும் சேனுயக்கா அரசாங்கம் விவசாயியின்நெல்லுக்கு 6 ரூபா மாத்திரமே விதிக்கும் கேவலமான நாநமான, பிடிவாதமான அராகரிகமான கொள்கையை இந்த அரசாங்கம் தவிர்க்க இஷ்டமில்லாதிருக்கும் வரையில், விவசாயி ஒர்போதும் தலைநிமிர முடியாது. இன்று இலங்கை விவசாயத்திற்கு விரோதமானவர் மிஸ்ரர் சேனுயக்காதான் என்றே சொல்லக்கிடக்கின்றது. தாம் எந்தவிதமான விவசாயக்கொள்கையை இந்தப் 16 வருஷமும் கடைப்பிடித்தனரோ, அதே கொள்கை கெடாதபடி யிருக்கவே, மிஸ்ரர் சேனுயக்கா விவசாயமந்திரியாகத் தமதுமகன் மிஸ்ரர் டட்லி சேனுயக்காவை, தேர்ந்துள்ளார் இந்தநிலைமையில், இனியாவது நாம் உணவு விஷயத்தில் தற்பாதுகாப்புடையோமாக இருப்போம் என்று மனப்பால் குடிப்பதற்கு இலங்கைமக்கள் அவ்வளவுஏமாந்தவர்கள் அல்லர்.

தேசாதிபதி அன்று கூறியவை அனைத்தும் கிரியாம்சத்தில் நிறைவேறவேண்டுமானுல், சேனுயக்கா அரசாங்கம் தனது அடிப்படையான கொள்கைகளில், அவற்றை நடத்தும் முறையிற் புரட்சிகரமான மாறுதல்கள் செய்யவேண்டும். அவற்றைச் செய்வதற்கு இந்த அரசாங்கம் தயாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்புவாதப்பேயைவிரட்டும்வழி

## ஒரே சமுதாயம் அமைக்க

### சிங்களத் தலைவர்களுக்கு ஓர் வேண்டுகோள்

[ நமது அரசியல் நிருபர் எழுதுகிறர் ]

ஸ்ரீ செல்வநாயகத்தின் கூற்று ஆதாரபூர்வமற்றதென்றும், அது தமிழ் மக்களுக்கே பெருங் கெடுதியை விளைக்க ஏதுவாகுமென்றும், அக்கூற்றினை இந்தியத் தலைவர்களே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் கூறினர் ஆனல் ஓர் விஷயத்தை நாம் அவதானித்துக்கொள்ள வேண்டும். நெருப்புப் பொறி சிறிதாயினும் அது ஓர் பெரிய இல்லத்தையே சாம்பராக்கக்கூடியது. ஓர்குடம் பாலை ஒரு துளி புளி பங்கப்படுத்தும் அதுபோல, இன்று ஸ்ரீ செல்வநாயகத்தின் கூற்றை நாம் கேவலமாக அலட்சியம் செய்வோமானல், அது ஓர்கால் ஆபத்திற் கொண்டு போய் விடவும்கூடும். பாகிஸ்தான் பல்லவியை இற்றைக்குச் சிலகாலத்துக்கு முன் ஜின்னு சாய்பு பாடியபோது அதனை எண்ணி நகையாடினவர் அநந்தம்பேர். ஏன்? முஸ்லீம்கள்தாமும் அது நடைபெறும் கருமமல்ல என்று கூறினர். ஆனல் சிரங்குமுற்றிப் பவுத்திரமான தன்மைபோல, ஈற்றில் பாகிஸ்தான் ஜின்னுவுக்குக் கிடைத்துத்தான்விட்டது. பிரித்தாளும் கொள்கையுடைய பிரிட்டிஷார் அங்கேயிருந்து பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டிவிட்டபடியினுல் தான் பாகிஸ்தான் கிடைத்தது; பிரிட்டிஷார் அப்படியான அக்கிரமத்தை, அப்படியான தந்திரத்தை இங்கேயும் இனிச் செய்யாதபடி மூட்டை முடிச்சுக்களுடன் கிளம்பப்போகின்றனர் என்று சிலர் சமாதானம் கூறலாம். இந்தக் கூற்றில் ஓரவு உண்மையுண்டுதான். ஆனல்வகுப்புவாதம் என்பது அக்கினி ஆறு; அதனை நீர்த்துச் செய்யப்போகும்கருமங்கள்யாவும், அவ்வக்கினியாற்றிற் கட்டப்படு மூரோமப்பாலத்துக்குச் சமம்என்பதனையும், உலகத்தில் வகுப்புவாதத்தைக் கிளப்பி, வகுப்புத் துவேஷத்தையும் சாதிப் பிரிவினையையும் தூண்டுதலே மிகச் சுலபமான கருமங்கள் என்பதனையும் மறந்துவிடவொண்ணுது

●

#### வருமுன் காக்கவேண்டும்

ஆபத்துவருமுன் அதனை நீக்க முயல்பவனே புத்திமான்; அவனே இராஜ தந்திரி. சிங்களத் தலைவர்கள் புத்திசாலிகளாயிருந்தால், தமிழ்க் காங்கிரசின் நோக்கை நன்கு உணரவேண்டும். ஓர் நச்சுமரத்தை வெட்டி யழிக்கவேண்டுமானல், அதன்வேரும் அடிமரமும் அப்படியே இருக்கக் கொம்பர்களையும் இலைகளையும் வெட்டுவதால் பயன்கிடைக்கமாட்டாது. இன்று துர் அதிர்ஷ்டவசமாக, சிங்களர் தமிழர் என்னும் இருசாரார்க்குமிடையே அபிப்பிராயபேதம் வளர்ந்து பிணக்காக முற்றிக்கொண்டது. இந்தப் பிணக்கை நிர்மூலமாக்கி முந்திய நல்லுறவை ஏற்படுத்துவதில் பெரும்பான்மைச் சாகியத்தாரின் தலைவர்கள் முயற்சி செய்தல் வேண்டும். இங்கொரு ஆஸ்பத்திரி அங்கொரு பள்ளிக்கூடம், இன்னோர் இடத்தில் கைத்தொழில் நிலையம் ஆரம்பிப்பதால் அல்லது தமிழ்மக்களில் ஓர் சிலர்க்கு மந்திரிப்பதவிகள் வழங்குவதால் இந்தத் துரதிர்ஷ்டமான நிலைமை நீங்கமாட்டாது. நேர்மாருக அது அதிகரித்துக்கொண்டே வரும் சிங்களத் தலைவர்கள் முதலில் தமது மனப்பான்மையை முற்ருக மாற்றவேண்டும். இந்த இலங்கா சத்வீபம் சிங்களராகிய தங்களுக்காகவே சிருஷ்டி செய்யப்பட்டது என்றும் அதில் ஏகபோக உரிமைகள் அனுபவிக்கத் தங்களுக்கே உரிமைகள் உண்டென்றும் ஓர் பேய்த்தனமான அபிப்பிராயத்தைச் சில சிங்களத் தலைவர்கள் கொண்டு அதனைப் பாமர மக்களுக்குப் பிரசாரம் செய்தும் வருகின்றனர். இப்படித் தாம் செய்துவருவதை இச்சிங்களத் தலைவர்கள் மறைக்கவோ, மறக்கவோ முடியாது. பூனை பால் குடிப்பது போலக் கருமம் ஆற்றுதற்கு இது — இந்த 20 வது நூற்ருண்டு காலம் அல்ல என்பதைச் சிங்களத்தலைவர்கள் உணராமல் இருப்பது விசனத்துக்குரியதாகும்.

●

#### பண்டாரநாயக்காவின் தேசீயம்

இன்று அதிகார பதவிகளில் அமர்ந்திருக்கும் சிங்கள மந்திரிகள் "படிப்பது தேவாரம், இடிப்பது சிவாலயம்" என்ருங்கு கருமம் ஆற்றுகிருர்கள். இவர்களில், ஸ்ரீமான்கள் ஜெயவர்த்தன, பண்டாரநாயக்கா, குணசிங்கா போன்றவர்கள் பழுத்த தேசீயம்பேசி, தடித்த வகுப்புவாதம் தங்கள் பத்திரிகைகளில் எழுதி வருவதைத் தமிழ்மக்கள் அறியாமலில்லை என்பதை அவர்களுக்கு அறிவிக்கவேண்டியிருக்கிறது. இவர்கள் தங்கள் சுயநலத்துக்காக, இத்தகைய வகுப்புவாதத்தைத் தம் பத்திரிகைகளிற் கிளப்பி பாமர சிங்கள மக்களைத் தப்பான வழியில் செலுத்தி வருகிருர்கள். இவர்களில் தலைமைப்பதவி தாங்குபவர் மிஸ்ரர் பண்டாரநாயக்கா, அடிநாக்கில் வகுப்புவாத நஞ்சும், நுனிநாக்கில் பரந்த தேசீயவாதமும் பேசும் இந்த வடிகட்டின சிங்கள வகுப்புவாதியைத் தமிழ் மக்கள் ஓர்விதமாக விளங்கியிருத்தல் உண்மையில் துக்கத்திற்கிடமான செய்தியாகும். இன்று இலங்கையின் வகுப்புவாதத்தின் தந்தையவர். அந்தப் பைசாசத்துக்குத் தம் சிங்களமகாசபை மூலமாயும், தம் "சிங்கள பலய" என்னும் பத்திரிகை மூலமாயும் தூபதீபம் போட்டு அதனை அநுதினமும் ஆராதிப்பவர் அவர் என்பதனையும், அவர் பிரதமராக வந்தால், தமிழ் மக்கள் நிலைமை இப்போதிலும்பார்க்கச் சீரடையமாட்டாதென்பதனையும் நம்மவர் இப்போதே சிந்தித்து ஏற்றனசெய்தல் நலம். இது நிற்க.

●

#### சிங்களத் தலைவர்கள் செய்யவேண்டியன

சிங்களத் தலைவர்கள் உண்மையில் பரந்த நோக்கம்கொண்டு, இந்த இலங்கையில் வதியும் தமிழ்மக்களுக்குச் சம உரிமை கொடுக்கச் சித்தமுள்ளவர்களாயின், முதலில் தமது வகுப்புவாதப் பிரசாரத்துக்கு ஓர் முற்றுப்புள்ளி வைத்தல்வேண்டும். இரண்டாவதாகத் தமிழ் மக்களுடைய பொருளாதார நிலைமையைத் திருத்துதற்கு விசேஷமுயற்சி செய்தல்வேண்டும். வகுப்புவாதம் பயத்தை ஆதாரமாகக்கொண்டது. தமிழ் மக்களுக்கோ பொருளாதார வளங்கள் இல்லை பூமி திருத்தியுண்ண வசதியில்லை. கைத்தொழிற் சாதனங்கள் இல்லை. இதுவரை மலாய்நாட்டில் உத்தியோகம், தென் இலங்கையில் உத்தியோகம் வகித்து யாழ்ப்பாண மக்கள் தம் பொருள் வருவாயை உண்டாக்கினர். மலாய்நாடு இனி, அந்நிய நாட்டாரை ஏற்றுக்கொள்ள மாட்டாது. தென் இலங்கையில் இதுவரை "வெள்ளைக்காரர்" அதிகாரத்தில் இருந்தபடியால் பட்சபாதகமின்றித் திறமையை நோக்கி உத்தியோகங்கள் வழங்கினர். ஆனல் இனியும் அந்த நிலைமை ஏற்படுமா? என்று தமிழ்மக்கள் அஞ்சுகின்றனர். இந்த அச்சத்தைத் தீர்க்கவேண்டும்; அரசாங்க உத்தியோகங்கள் வழங்கும்விஷயத்தில்பட்சபாதகமற்ற கொள்கையேஎன்றும்அநுட்டிக்கப்படும் என்பது பகிரங்கமாகஅறிவிக்கப்படல்வேண்டும் உத்தியோகம்வகித்துச் சீவிப்பவர்கள் மிகக் குறைந்ததொகையினர். மீதிப்பேரின் பொருளாதார வருவாயை அதிகரிக்க முயற்சிகள் எடுத்தல் வேண்டும், புகையிலை சுருட்டுத் தொழில்களை நன்னிலைப்படுத்த வழிவகைகள் கையாளப்படல் வேண்டும். விவசாய விருத்திக்கான குளங்கள் நிர்மாணிக்கப்படல்வேண்டும். கைத்தொழில்கள் கிராமந்தோறும் நிறுவப்பட்டுச் சகலர்க்கும் பிழைப்புக் கொடுக்கப்படல் வேண்டும். இன்று விவசாய விருத்தியின்பொருட்டு மின்னேரியா, காகம, (சேனபுரம்) பக்கமூனை நிடியகம, வீரவிலை அநுராதபுரம், பொலன்நுவை முதலாம் இடங்களில் கோடிக்கணக்கான ரூபா விரயம் செய்யப்பட்டு வருகிறது. இத்தொகையில் ஓர்சிறுபாகத்தைத்தானு வடமாகாணத்துக்கு அநுமதிக்கவேண்டும். மலேரியாவின் உறைவிடமாய் இருந்த பொலன்நுவை இன்று ஓர் நகரமாய்விட்டால், வடமாகாணத்துக் கிளிநொச்சி பரந்தன் ஏன் அப்படிப் பட்டினங்களாக வரக்கூடாது?

●

#### வகுப்புவாதம் அகல வழி

மக்களின் வறுமை — பொருளாதார பிற்போக்கு நிலைமை — தான் வகுப்புவாதிகளின் வாய்ப்பான ஆயுதங்கள். எனவே வகுப்புவாதத்தைக் களையவேண்டுமானல், அரசியல் அதிகாரத்தைக் கைக்கொண்டுள்ள சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களது பிற்போக்கான பொருளாதார நிலைமையைப் போக்க முன்வரவேண்டும். இவ்விஷயத்தில் அரசாங்கம், சமசமாஜிகளின் தலைவர் டக்டர் என். எம். பெரேரா தாம் எடுத்தாளப்போவதாக 'அறிவித்தல் கொடுத்திருக்கும் பிரேரணைகளை ஆராய்வுக்காவது ஏற்றுக்கொள்ளவேண்டும். லட்சக்கணக்கானமக்கள்நித்தியதரித்திரத்தில் மூழ்க ஓர்சிலர்விலாப்புடைக்கஉண்டுஇந்திரபோகம் அனுபவிக்கும் சமூக அமைப்பு முறையை அரசாங்கம் உடனே மாற்றவேண்டும். இந்நாட்டிற் பிறந்த எவனும், எவளும் சமஉரிமை — சமசெல்வம் — சமஅந்தஸ்துப் பெறவேண்டும். இலங்கையின் நிர்வாகம் இலங்கையர் கைக்குப் படிப்படியாக வந்தகாலந் தொடக்கம் இங்கே லஞ்சம் கொடுத்தல் வாங்கல் என்னும் வழக்கம் அதிகரித்திருப்பதை அரசாங்கம் நன்கு அறியும். நேற்று 'எட்டாங் கட்டளை'க்கு எழுதிய ஓர் உத்தியோத்தர், ஓர் வர்த்தகர், இன்று இலட்சாதிபதியாக இருக்கும் இரகசியமென்ன? இவற்றை ஆராய்ந்து லஞ்சப் பழக்கத்தை அடியோடு நீக்கவேண்டும். [மதுவரக்கனை நாட்டினின்றும் துரத்தவேண்டும். கல்விச்சாலைகள் பெருகவேண்டும். பழைய ஹிந்து, பௌத்த சமுதாயச் சமத்துவம் மீண்டும் நிலவவேண்டும். அப்படி நிலவும் காலத்தில், சிங்களர் தமிழர் இஸ்லாமியர் என்ற பேதம் அகன்று எல்லாரும் இலங்கையர் என்ற நிலை ஏற்படும். வகுப்பு வாதத்தைக் கெடுத்து ஒரே இலங்கைச் சமுதாயம் உண்டாக்க இதுதான் மார்க்கம். இதனைக் கடைப்பிடிப்பது சிங்களத் தலைவர்களின் கடமை. ஆனல் அவர்கள் அப்படிக் கடைப்பிடிப்பார்களா?

# அரசியலில் அழுக்கு

## அதனை நீக்கத் தலைவர்கள் கடமை



[இன்று இந்நாட்டைப் பீடித்திருக்கும் வகுப்புவாதப் பேயைத் துரத்துவது எப்படி என்பதைப் பாராளுமன்றத்துப் பிரதிநிதி ஸ்ரீ கே. கனகரத்தினம் அவர்கள் இக் கட்டுரை மூலம் அழகாக விளக்குகிருர்.]

இலங்கைச் சுதந்திர மசோதா பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இரண்டாம் முறையாகவும் நிறைவேறிவிட்டது. அந்த மசோதாபற்றிய விபரங்கள் வெளியானதும், அதற்குச் சாதக பாதகமான அபிப்பிராயங்களைப் பலர் பலவிதமாக வெளியிட்டு வந்திருக்கிருர்கள். இந்த மசோதாவின் அம்சங்கள் என்ன? இதன் வெளித்தோற்றத்துக்கு மாருன உட்கருத்துக்கள் இதில் மறைந்து கிடக்கின்றனவா? என்னும் இன்னோரன்ன வாதப்பிரதிவாதங்களைக் கிளப்புவது எனது நோக்கமல்ல. ஆனல், நேர்மைவழியைக் கடைப்பிடிக்கும் பட்சபாதகமற்ற மக்களை நான்கேட்டுக்கொள்வது ஒன்றுண்டு. அது இதுதான்: எங்கள்தாய்நாடு பன்னெடுங்காலமாகக்கிடந்த அடிமைச் சூழியினின்றும் இன்று விடுதலையடையும் நிலையில் இருக்கிறது. இந்த நிலைமைபற்றி, இந்தச் சந்தர்ப்பத்திலே நாட்டுமக்களின் மனேநிலை எவ்வாறு இருக்கிறது என்பதை ஆராயும்படி நான் என் சகோதர சகோதரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன்

இலங்கையின் புதிய பாராளுமன்றம் கூடப் போகிறது புதிய அரசியல் திட்டம் அங்குரார்ப்பணமாகின்றது. பூரண பொறுப்புவாய்ந்த ஓர் மந்திரசபையும் ஓர் பிரதம மந்திரியும் இலங்கைக்குக் கிடைக்கப்போகின்றது. ஆகவே இச்சந்தர்ப்பத்திலே இலங்கைமக்கள் எல்லோரும் ஆனந்தக்கடலில் துள்ளிக்குதிக்கவேண்டும் என்றெல்லாம் குடியேற்றநாட்டு மந்திரி அன்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே தெரிவித்தார். இலங்கையின் சுதந்திரம் சம்பந்தமாகவும் பொறுப்பாட்சி சம்பந்தமாகவும் பிரிட்டிஷ் அரசாங்கம் விடுத்த இரண்டு பிரதான வியாக்கியானங்களும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மனத்தூய்மையையும், பரந்த மனப்பான்மையையும், அகில உலகுக்கும் நூலாம்பரமாக எடுத்துக்காட்டி அந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிலைமையைத் தெள்ளத் தெளிய இந்த உலகம் முழுவதுக்கும் காட்டும் என்றும் பிரிட்டிஷ் குடியேற்றநாட்டு மந்திரி பலபட விரித்துரைத்தார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே விவாதம் நடந்தபோது, கன்ஸர்வேற்றிவ் கட்சியங்கத்தவரான கப்ரின் காமன்ஸ் சிங்கள மக்களுக்கோர் புத்திமதியையும் கூறினர். தமிழரோ சிறுபான்மையினர்: இப்படியே நாம் சதா சிறுபான்மையினராக விருந்து அரசியல் அநாதைகளாக இருக்கப்போகிறோமா என்று தமிழ்மக்கள் ஏக்கமும், ஏமாற்றமும் அடைந்திருக்காமல், அவர்களிடம் தாராள மனப்பான்மை காட்டி, சாதாரண உரிமையல்ல, விசேஷித்த உரிமைகளை அரசியலில் வழங்குவதோடு மாத்திரம் நிற்காமல், அந்த அரசியலில் அதிகாரம், ஆதிக்கம், பொறுப்பு, செல்வாக்கு என்பவற்றையும் வழங்கவேண்டுமென்று கப்ரின் காமன்ஸ் அன்று கூறினர். இப்படி அவர் ஏன் கூறினர்? கூறக் காரணம் என்ன? இந்த இலங்கையின் அரசியல் வாழ்வில் முக்கிய தொண்டாற்றி, இந்த நாட்டின் அரசியல் பொருளாதார முன்னேற்றத்தில் அதிக பங்கெடுத்த தமிழ்மக்கள் சிறுபான்மையினர் என்ற காரணத்தினால், இன்றைய இலங்கை யரசியலில், அவர்களுக்கு நியாயமான பங்குதானும் வழங்கப்படவில்லை என்பதை கப்ரின் காமன்ஸ் உணர்ந்தமையினுலேயே இப்படி அவர் கூறவேண்டி யேற்பட்டது. தமிழ்மக்களின் அரசியற் சரித்திரத்தில் முதன் முதலாக இங்கே ஓர் விசேஷித்த சம்பவம் நடந்திருக்கிறது, அவர்கள் தமக்கென ஓர் கட்சியை நிறுவினர். அக்கட்சியின் சார்பாகச் சென்ற பாராளுமன்றத் தேர்தலில் அபேட்சகரை நிறுத்தினர். இவ்வபேட்சகர்களுக்கு விரோதமாக செல்வமும் செல்வாக்கும் கொண்ட தனி மனிதரும், அதிகாரம், ஆதிக்கம்கொண்ட கட்சியினரும் நின்றனர். ஈற்றில் நிகழ்ந்தது என்ன? தமிழ்மக்கள், தங்கள் ஸ்தாபனத்தின் சார்பாக நின்ற அபேட்சகர்களையே மிகப் பெரும்பான்மையினராக ஆதரித்து, எதிராக நின்றவர்களை முறியடித்தனர் சென்ற பாராளுமன்றத்தேர்தலில், தமிழ்மக்கள் தங்கள் உண்மை நிலை

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் அழுக்கு

3ம் பக்கத் தொடர்ச்சி

யைப் பட்டவர்த்தனமாகத் தெரிவித்து, "இவர்கள் தான் எம் பிரதிநிதிகள்" என்று தம் பிரதிநிதிகளைத் தெரிந்து விட்டனர் இப்படித் தெரிவுசெய்யப்பட்டவர்களின் அரசியற் கொள்கைகள் எப்படியிருந்த போதிலும், அவர்களே தமிழ்மக்களின் தனிப்பெரும் பிரதிநிதிகள் என்பதை உணர்ந்து, கேவலம் இராஜதந்திரம்பற்றியேனும், அரசாங்கத்தை அமைக்கும் விஷயத்தில் அவர்களையும் அழைத்துக் கலந்தாலோசித்தல், எந்தத் தலைவனதும் பெரும் கடமையாகும். அரசியல் அமைப்பில் தமிழ்மக்களுக்கு உரித்தாயுள்ள பங்கைக் கொடுக்காமல் இருக்கலாம்; ஆனால் தமிழ்ப் பிரதிநிதிகளை— தமிழ்மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அவர்களை-அழைத்துக் கலந்தாலோசிக்கத்தானும் சிங்களத் தலைவர்களுக்கு மனம் வரவில்லை! இந்த இலங்கையின் பூரண சுதந்திரப்போராட்டத்தின் முன்னணியில் நின்றவர்கள் தமிழ் மக்கள்! எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் ஈழவளத்தாயின் மக்கள் என்று சங்கநாதம் செய்தவர்கள் வீரத் தமிழ்மக்கள்! இன்று இலங்கை சுதந்திரப் பாதையில் வெகுதூரம் முன்னேறி அந்த வீர சுதந்திர மாளிகையை அடைந்துவிட்டதென்றால், அதற்குப் பொறுப்பாளிகள் தமிழ்மக்கள்! அப்படிப்பட்ட தமிழ் மக்களின் தனிப்பெரும் பிரதிநிதிகளைப் புறக்கணித்து ஒதுக்கி வைத்திருப்பதனாலே, அன்று குடியேற்றநாட்டு மந்திரி கூறியாங்கு இன்று மனமகிழ்ச்சி யடையவில்லை. எங்கள் அடிமைத்தளை படபட வென்று நொருங்குகின்றது! அந்தகாரம் நீங்குகின்றது! அதோ சுதந்திர சூரியன் உதயமாகின்றான்! இந்தப் புனித சந்தர்ப்பத்திலே, இலங்கையைத் தாயகமாகக் கொண்ட எல்லா மக்களும் ஜெயஜெய வென்று சந்தோஷ ஆரவாரம் செய்ய எங்கள் தாய்நாடு கொடுத்துவைக்கவில்லை என்பதை எண்ணி எண்ணி என்மனம் கவல்கின்றது.

இந்தக் சந்தர்ப்பத்திலே சமரசம் நிலவ வேண்டும். சமாதானம் மிளிரவேண்டும் வகுப்பு ஒற்றுமை துலங்கவேண்டும் ஆனால் இன்று நடப்பதென்ன? நெடுநாளைய அந்நியராட்சிக்காலத்திலும் இல்லாதவிதமான வகுப்புத் துவேஷம், ஜாதிப் பிரிவினை சமூகச்சண்டை என்பன இன்று தலைவிரித்தாட ஓர் சிலர் தூண்டி வருகிறார்கள். இன்று சில சிங்களப் பத்திரிகைகள் ஆற்றுவது என்ன? கொடிய வகுப்புவாத நஞ்சைக்கக்குகின்றன. சிங்களமக்களைப் பலாத்காரத்தைப் பிரயோகிக்க அவை தூண்டுகின்றன. இச் சிங்களப் பத்திரிகைகள் பொறுப்பற்றவர்களால் வைத்து நடத்தப்படவில்லை இவற்றிற்சில பிரபல அரசியல்வாதிகளாலும் சமூகத் தலைவர்களாலும் நடத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலே சிங்கள மக்கள் கொடுமையாக நடத்தப்படுகின்றனர், நசுக்கப்படுகின்றனர் என்பதுபோன்ற கட்டுக்கதைகளும் இப்பத்திரிகைகளில் வெளிவருகின்றன. ஆனால், யாழ்ப்பாணத்து பௌத்த வாலிபசங்கத் தலைவர் (அவர் ஓர் சிங்களர்) யாழ்ப்பாணத்தில் சிங்களரும் தமிழரும் தேனும் பாலும்போல ஒழுகி வருகின்றனர் என்று அன்று மிஸ்ரர் டண்டாரநாயக்காவுக்கு நடந்த வரவேற்புபசாரத்திற் கூறினார். ஆனால் இப்படியெல்லாம் சிங்களப் பத்திரிகைகள் வசைமாரி பொழிந்தும், தமிழ்ப் பத்திரிகைகள் இதுவரை இப்படியான இழிதொழிலில் ஈடுபடாமைபற்றி நான்மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கையின் புதிய பாராளுமன்றம் அங்குரார்ப்பணமாய்விட்டது. அதன்பின் இலங்கையின் சுதந்திரம் வழங்கப்படும். அச் சுதந்திரம் எப்படிப்பட்டதாயினும் ஆகுக. நான் கூறக்கூடியது இதுவே:வரப்போகும் புதியசகாப்தத்திலே சாந்தி, சமாதானம், அமைதி, செல்வம் என்பன திகழ வேண்டுமானால், எந்நாட்டிலும் சிறந்த பொன்னாடாக எங்கள் ஈழவளநாடு திகழ வேண்டுமானால், இங்குள்ள ஒற்றுமை அமைதி என்பவற்றால் குழப்பமும் பீதியும் அடைந்துள்ள உலகுக்கு நாம் வழிகாட்ட வேண்டுமானால், இன்றுள்ள அரசியல் அழுக்கு அறவே அகற்றப்பட வேண்டும். அந்த அழுக்கை நீக்க இவ்விலங்காத்வீபத்தில் வாழும் சகல மக்களுக்குமிடையே சமரசபாவத்தை உண்டாக்கி இந்நாட்டை அரண்படுத்தவேண்டும். இந்நாட்டுத் தலைவர் என இருப்போர்க்கு இது ஓர் சோதனைக்காலம். அவர்கள் என்னசெய்யப்போகிறார்கள்? கேவலம் சுயநலத்தினால், அதிகார ஆசையினால், சர்வாதிகாரத் திமிரினால் எம் தலைவர்கள் என்றிருந்தோர், நாட்டின் ஒற்றுமையைப் பாழாக்கித் தேசத்தைத் தியாகம் செய்துவிட்டனரே என்று வருங்கால சந்ததியார் திட்டாதவாறு தலைவர்கள் ஒற்றுமையோடு ... யாற்றுவாரா?

## திருச்சி ரேடியோ

சனி நவம்பர் 29

7 15 தோரம்பம். 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி ஆர் பெருமாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 வி எஸ சக்ரபாணி வயலின் 8 30 காலை இசை 9 முடிவு.

1 வி எஸ சக்ரபாணி வயலின் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 ஆங்கிலப் பேச்சு 2 தமிழில் செய்திகள் 2 05 ஆங்கிலப் பேச்சு 2 15 டி ஆர் பெருமாள் பாட்டு 2 45 முடிவு.

5 அண்ணாமலை நகர் வி. வேதவல்லி பாட்டு 5 40 ஆண்டாள் பாசுரம் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராமநிகழ்ச்சிகள் 7 அண்ணாமலை நகர் வி வேதவல்லி பாட்டு 7 15 ராணுவத்திலிருந்து திரும்பியவர்களுக்கு வேலை 7 30 தமிழில் செய்திகள் 7 45 மதராவில் உள்ளபடி 9 ஆங்கிலத்தில்செய்திகள் 9 15 குரல்வகை 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் 9 45 கே பி தேவராஜூ ஸாக்ஸபோன் 10 இசைவேளை 10 30 முடிவு.

ஞாயிறு நவம்பர் 30

7 15 தோரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 எ ராமகிருஷ்ணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை 8 30 வி மைதிலி வீணை 9 முடிவு

12 கதம்பம் 12 20 தந்தியம் பிடியும 12.35 லீவ்கிடைத்தாலும் 12 50 பெரும் பரிசில் 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சிதம்பரம் ஜி அம்புஜவல்லி 3 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2 30 நீங்கள்கேட்டவை 3 முடிவு

5 வி மைதிலி வீணை 5 40 தேவாரா தனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 எ ராமகிருஷ்ணன் பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 உள்ளதைச் சொன்னால் 8 என் ஜி சீத ராமையர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் 9 45 புல்லாங்குழல் 10 இசைவேளை 10 30 முடிவு.

திங்கள் டிச 1

காலை 7 15 தோரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 சிதம்பரம் டி கிருஷ்ணமூர்த்திபிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதிய பாடல்கள் ஆ இ ரே வித்வான்கள் தயாரிப்பு 8 30 சரோசினி ஜகந்நாதன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சரோசினி ஜகந்நாதன் பாட்டு 2 தமிழில்செய்திகள் 2 05 சரோசினி ஜகந்நாதன் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 சிதம்பரம் டி கிருஷ்ணமூர்த்திபிள்ளை நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 கே வீ தியாகராசன் பாட்டு 7 15 முன்னேட்டம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 தக்குதேவயா? 8 கே வி தியாகராசன் பாட்டு 8 30 இசைக்கதம்பம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஞானம்பாள் பாலகிருஷ்ணன் வீணை 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

செவ்வாய் டிச 2

காலை 7 15 தோரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 கே வி ராஜாராம் ஐயர் புல்லாங்குழல் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 குரல்வகை இசைத்தட்டு 8 30 பி மகாலிங்கம் வி சுப்பிரமணியம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 ஆர் தண்டபாணி ஐயர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 ஆர் தண்டபாணி ஐயர் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

காலை 5 கே வி ராஜாராம் ஐயர் புல்லாங்குழல் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் இசைத்தட்டு 7 15 காப்பிய ஆசிரியர்கள் 7 30 தமிழில் செய்திகள் 7 45 கே எஸ வெங்கடராமய்யர் வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் 9 45 எஸ் கே சுமதி பாட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.

# பாராளுமன்ற அங்குரார்ப்பணம்

## தேசாதிபதி ஆரம்பித்து வைத்தார்

இலங்கையின் முதற் பாராளுமன்றம் அதிவிமரிசையாகச் சென்ற செவ்வாய்க்கிழமை, மேன்மைதங்கிய இலங்கைத் தேசாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்படி அவர் ஆரம்பித்துவைக்கையில், அரசாங்கத்தின் கொள்கையை விளக்கி ஓர் பிரசாரணம் செய்தார். அப்பிரசாரணத்தில், இலங்கைக்குக் கிடைக்கப்போகும் சுயராச்சிய அந்தஸ்தைப்பற்றிக் குறிப்பிட்டார். புதிய அந்தஸ்து அடைந்ததும். இலங்கை அந்நியநாடுகளுடன் ஓர் புதிய உறவை எற்படுத்தும் என்றும், எல்ல நாட்டவருடனும் சமாதானமாக வாழ்வதே இலங்கையின் அந்நிய நாட்டுக்கொள்கையின் மூலாதார அம்சமாக இருக்குமென்றும் தேசாதிபதி குறிப்பிட்டார். இன்னும், இந்தியா—இலங்கை சம்பந்தமான விவகாரம் கூடிய சீக்கிரத்தில் முடிவெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு விஷயம் சம்பந்தமாகத் தேசாதிபதி, இலங்கையில் உணவு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய நடைவடிக்கை எடுக்கப்படுமெனவும், இப்போதைக்குக் கட்டுப்பாட்டு முறைகளைக் கைவிட நோக்கம் இல்லையென்றும், அவசிய உணவுப் பொருள்களை இதுவரை செய்ததுபோல அரசாங்கமே விநியோகிக்கும் என்றும் கூறினார். கைத்தொழில்களைப் பெருக்கி, நாட்டுமக்களுக்கு வேண்டிய பொருள்களை அதிகமாக உற்பத்திசெய்ய நடைவடிக்கை எடுக்கப்படும்; ஜனசமூக சேவைக்கான ஓர் புதிய பகுதியை அரசாங்கம் ஆரம்பித்து, அதன்மூலமாக மக்களது சமூகநிலையை ஸ்திரப்படுத்த முயற்சிசெய்யும் என்றும் தேசாபதி குறிப்பிட்டார்:

கல்வி விஷயமாகச் சொல்லுகில் இலவசக்கல்வித் திட்டத்தையே அரசாங்கம் பின்பற்றும் என்றும், இலங்கைத் தேசிய பாஷைகள் மூலமாகவே வித்தியாசாலைகளிற் கல்வி புகட்டப்படும் என்றும் தேசாதிபதி குறிப்பிட்டார். இன்னும் இலங்கையில் புதிதாக இயற்றப்பட விருக்கும் சட்டங்களைப்பற்றியும் தேசாதிபதி பிரஸ்தாபித்தார்.

தேசாதிபதியின் பிரசாரணத்துக்கு அரசாங்கத்தின் சார்பாக மிஸ்ரர் மொன்ராகு ஜெயவிக்கிரம நன்றியுரை கூறினர். அதனை மிஸ்ரர் எம். டி. பண்டா அநுவதித்துப் பேசினர்.

இதற்கு முதனாள் இரவு தேசாதிபதி ரேடியோமூலம் இலங்கை மக்களுக்கு ஓர் செய்தி விடுத்தார். அதில் அவர் இடதுசாரிகளாம் எதிர்க்கட்சியினரைப் பற்றிக் குறைசொன்னர் என்று சென்ற செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த எதிர்க்கட்சியினர் மகாநாட்டிற் கூறப்பட்டது. தேசாதிபதி இப்படிக் கூறியமையினால், அவருடைய பிரசாரணத்தைக் கேட்க, எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்துக்குப் போகவேண்டாம் என்று டக்ரர் கொல்வின் ஆர் டீ. சில்வா ஆலோசனை கூறியதாகத் தெரிகிறது. அந்த ஆலோசனையைச் சமதர்மிகளும், சமசமாஜிகளும் ஆதரித்தனர் என்றும், தமிழ்க்காங்கிரஸ். இந்தியக் காங்கிரஸ் வாதிகள் அதனை எற்கவில்லை என்றும் ஓர்செய்தி கூறுகிறது ஈற்றில் டக்ரர் கொல்வின் ஆர் டீ. சில்வாவின் போல்ஷெவிக் லெனின் கட்சியை ஒழிந்த ஏனைய கட்சிகள் பாராளுமன்றத்திற் சமுகமாயிருந்து தேசாதிபதியின் பிரசாரணத்தைக் கேட்டன.

தேசாதிபதியின ரேடியோப் பிரசாரணத்தைக் கண்டித்து எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் டக்ரர் என். எம். பெரீரா மூலமாக ஓர் அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

## அறிவித்தல்

வண்ணார்பண்ணை மத்திய ஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு மனேஜர் தேவை. 10—12—47க்கு முன் விண்ணப்பப்பத்திரம் கீழ்க் குறிப்பிடும் விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும். சம்பளம் தகுதிக்கும் அநுபவத்திற்கும் தக்கதாகக் கொடுக்கப்படும். மற்ற விபரங்களை நேரிலோ அல்லது எழுத்து மூலமாகவோ கீழே குறிப்பிட்ட விலாசத்தாரிடம் அறிந்து கொள்ளலாம். இங்ஙனம்,

வே, சுப்பிரமணியம்
ஷை பண்டகசாலைக் காரியதரிசி

விலாசம்:

வே. சுப்பிரமணியம்.
பண்டகசாலைக் காரியதரிசி No. 4
பிரப்பங்குளம்ரோட்,
வண்ணார்பண்ணை.

Mis 191 25, 28—11—47.

## சிறந்த இராஜதந்திரியாம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

அந்த அந்தஸ்தைப்பெறவில்லை. படிப்படியாக அரசியல் முன்னேற்றமடைந்து, ஈற்றில் இந்த உன்னதநிலைக்கு வந்திருக்கிறது.

1931-ம் ஆண்டிலே டொனமூர் அரசியல் திட்டம் வழங்கப்பட்டது. அது பூரணமற்றது என்று பல இடங்களிலும் அதிர்ப்தி தெரிவித்தார்கள். ஆனால் அதன் பயனாக, இலங்கைச் சிங்களர், இரண்டு தேர்தல்கள்மூலம் அரசியலில் நல்ல பயிற்சி பெற்றிருக்கின்றனர். அந்தத்திட்டத்து அரசியல்மூலம் சிறந்த மந்திரிமாராகவும் இலங்கையர் பயிற்சிபெற்றனர். அவர்களிற் சிரேட்டமானவர் மிஸ்ரர் சேனநாயக்கா, மிஸ்ரர் சேனநாயக்கா இதுவரை இலங்கை அரசியலில் ... தலைவராக இருந்து ... ற்றியிருக்கிறார் என்

## ஆலயங்கள்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

போல, இறைவனது ஒளிப்பிழம்பை ஞானிகள் காண்பர். கண்ணுடையார்க்குக் குருடில்லை. ஞானிகட்கு மலமறைப்பில்லை. கண்ணுடையாருக்கு ஞாயிற்றின் ஒளியே துணைநின்று ஞாயிற்றைக் காட்டுமாறு போல, ஞானிகட்கும் பதியினருளே துணையாய் நின்று சிவத்தைக் காட்டும் என்க. "அவனருளே கண்ணாகக் காணின் அல்லரல்" என்னுந் தமிழ் மறையும் ஈண்டறியத்தக்கது. இறைவனைக் காணுதற்கு மலமறைப்புள்ளார்க்கு சிவஞானம் பற்றுகாது. பற்றுவன மனமொழி மெய்களே, இவை பசுஞான பாச ஞானங்களாகும். ஆதலின், இறைவன் இவர்களும் தன்னைவழிபட்டுய்வான்வேண்டி அவ்வவர்க்கேற்ற வடிவங்கொள்வர். அவ்வடிவங்கள் யாவும் சுத்த மாயா காரிய வடிவங்களாம்; முதல்வன் அவற்றிற் றோயாதவனாயினும் அவனது சத்தி அம் மந்திரவடிவிற் றங்கி நின்று உயிர்கள்புரியும் வழிபாட்டை ஏற்று அருள்செய்யும் என்க. இவ்வுண்மை "அருளினால் உருவுகொண்டு காரணன் அருளானகில் கதிப்பவர் இல்லையாகும்" என்ற சிவஞான சித்தித் திருவிருத்தத்தால் அறியலாகும்.

## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்

பதனை மறுப்பதற்கில்லை. அவருடைய நுண்ணிய அறிவை, திடசித்தத்தை, பரந்த மனப்பான்மையைப் பாராட்டாதார் இல்லை.

"இலங்கையிலே சமதர்மக்கொள்கைளும்பரவிவருகின்றனதான். ஆனால் சமதர்மிகள் அவ்வளவு பெலமுடையவராகத் தோற்றவில்லை. விவேகத்தாலும், அரசியல் ஞானத்தாலும் சமதர்மிகள் தலைவர் மிஸ்ரர் பீற்றர் கெனமன் விசேஷமானவர்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

ரைப் பார்த்து "சுவாமி, நான் இதற்கு என்ன செய்வேன்! எங்கள் அருமை மருமகனைப் பற்றியும் ஏதும் அறியமுடியவில்லை; இந்த நாட்டில் வந்தேனும் அவரைப்பற்றி அறியலாமென்ற நோக்கத்தோடுதான் என்பிள்ளை பிறந்த ஊரையும் உற்றார் சுற்றத்தார் வீடுவாசல் பொருள்பண்டம் எல்லாவற்றையும் விட்டு மறந்து இங்கே வந்தாள்; இங்கு வந்தும ஆறுமாசங்கட்கு மேலாகின்றன; சுவாமி யாத்திரைபோய் மீண்டுவரும் போது தன் மைத்துனனைப்பற்றி ஏதும் அறிந்துகொண்டுதாம் வருவாரென்று என்பிள்ளை காத்திருந்தாள்; அப்படிக் காத்திருந்ததும் வீணாயிற்றெனக் கவலைகொண்டுதான் இந்த இடத்தைவிட்டுத் தன் னறையுட்போய்ப் படுத்துச் சிந்தனையோடு கிடக்கிறாள்; தகப்பனில்லாப்பிள்ளை; தமயனும் இந்தநேரம் இங்கேயில்லை; நான் எப்படித் தேற்றினாலும், என்ன சமாதானங்களைச் சொன்னாலும் அவள் தேறுகிறாளுமில்லை, கேட்கிறாளுமில்லை. எந்தநேரமுஞ் சஞ்சலத்தோடு கூடியவளாகவே காணப்படுகிறாள் ஒரேயொரு மகள், அவள் சஞ்சலப்படுவதனால், நானுங் கவலைப்படுகிறேன்; அவளுடைய தமயனுங் கவலைப்படுகிறான்; இதற்கு என்ன செய்வதென்று, சாமி,படித்தநீங்கள், தெய்வபத்தியுள்ள நீங்கள், நாலு காரியமு மறிந்த நீங்கள்தாம் ஒரு உபாயஞ் சொல்லவேண்டும்" என்று கவலைமீதூரச் சாமியை யிரந்தாள்.

### எழுதாவிதிக்கு அழுதாவதென்ன?

கண்ணகியம்மைசொன்னவார்த்தைகளைக் கேட்ட சாமியார் சிறிது நேரம யோசித்துவிட்டுப் பின்னர்க் கண்ணகியம்மையைநோக்கி "ஆச்சி, எழுதாவிதிக்கு அழுதாவதென்ன என்றபடி, மனுஷராகப்பட்ட எங்களுக்கு என்ன என்ன விதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவை நிகழும், விலக்கப்பட்டன நிகழா; இறைவனருளால நடப்பதை நாம் காண்பதேயொழிய, நாமாக எதனையும் நடத்தல் முடியாது; தாமுங் குருவுந் தலைவிதி யென்பர்: உங்கள் மருமகனை நீங்கள் காணவேணும், அவர் உங்கள் மகளைக் கல்யாணஞ்செய்து வாழவேணு மென்பதுதான் எனக்கும் விருப்பம். ஆனாலும் விதிவசத்தால், நீங்கள் எண்ணியிருப்பதற்கு மாறாக ஏதும் நேர்ந்தால் உங்கள் மகள் உப்படியே யிருப்பதா? அப்படியான நோக்க மிருந்தால் நான் உங்கள் மகளுக்கு ஏதுந் தேறுதல் சொல்வதாற் பயனென்ன...." என்று சொல்லுவதற் கிடையிற் கண்ணகியம்மை அவரைப் பார்த்து "சாமி, அது சந்திக்காவிட்டால், தான் இப்படியே கன்னிகையாக விருந்து காலங்கழிக்கவேண்டு மென்பது தான் எங்கள் மகளுடைய நோக்கம்: அதையிட்டுத்தான் கவலைப்படுகிறேன்: என் மகனுக்கும் அதனாற் பெருங்கவலை; ஆனாலும், சாமி உங்களைப்போன்ற பெரியவர்கள், அனுபவப்பட்டவர்கள், தெய்வபத்தி யுள்ளவர்கள் புத்திசொன்னால், என் மகள் கேட்டலுங்கூடுமென்று நினைக்கிறேன்" எனக் கண்ணகியம்மை சொல்ல, சாமியார் 'ஆச்சி, நான் பெரியவனுமல்லேன், தெய்வபத்தி அதிகமுடையவனுமல்லேன், என்னைப்பற்றி மூர்த்திய உங்களுக்குச் சொல்லிவிட்டேன்; அல்லாமலும் இப்படியான கருமத்தில் ஒரு கன்னிகைக்கு நாம் புத்திபுகட்டத் துணிவதே புத்தியாகாது; மேலும், ஆச்சி, உங்கள் மகளுக்கு இப்பொழுது நான் என்னவிதமான புத்தி சொல்வதென்பதும் எனக்கு விளங்கவில்லையே" என்றார்; "வேறொன்றுமல்ல, சாமி, விதியின் விபரீதத்தால் தன் மைத்துனனுக்கு மனைவியாய் வாழும்பேறு கிட்டாதாயின், வேறு ஒரு தக்கவரனுக்கு வாழ்க்கைப்படும்படி என் பிள்ளைக்கு நீங்கள் புத்தி சொன்னாற்போதும்" என்று கண்ணகியம்மை இரந்துகேட்டாள்; "ஆச்சி, சொல்லிப்பார்க்கிறேன், உங்கள்மகள் உடன்படாவிட்டால் என்னைக் குறை சொல்லாதீர்கள்" என்று சாமியார் சொல்லுதலும், "உங்களைக் குறை சொல்ல முறையில்லையே" யென்று சொல்லிவிட்டு, மகள் கவலையோடு படுத்துக்கிடக்கும் அறையுட் போய், சாமியார் அவளைக் காண விரும்புவதாக மகளுக்குச் சொல்லி அழைத்து வந்தாள் கண்ணகியம்மை; வந்தமகள் ஒருபுறத்தே ஒதுங்கிநின்று "சாமி, நான் செய்யவேண்டியதென்னசொல்லுங்கள்" என்று முகவாட்டத்துடன் கேட்டாள்; "செய்ய வேண்டியது வேறொன்றுமில்லை; உம்முடையதாயாரும் தமயனும் உம்மையிட்டுக் கவலைப்படுகிறார்கள்; அதைப்பற்றித்தான் ஏதுஞ் சொல்லலாமென்று உம்மை இங்கே அழைப்பித்தேன்" என்று சாமியார் சொல்லுதலும், "சாமி" அவர்களுக்குக் கவலை விளைக்கக்கூடிய தவறொன்றையும் நான் செய்யவில்லையே" என்றாள் சிவபாக்கியம்.

சாமி: நீர் தவறொன்றுஞ் செய்யவில்லை; செய்யப்போவதுமில்லை; இப்படி நித்திய கன்னிகையாகவிருந்தால் பிற்கால வாழ்வு எப்படியாகுமோ என்று உம்முடைய தாயார் கவலைப்படுகிறார்.

சிவபாக்கியம்: பிற்கால வாழ்வையும இப்படியே தூய முறையிற் கழிக்கலாகுந்தானே சாமி.

சாமி: காத்திருக்கும் பொருள் கிட்டாதாயின் வெட்டெனமறப்பதன்றோ முறை.

சிவ: கிட்டாதென்பதற்கும் கிட்டுமென்பதற்கும் மூற்றில்லை: கிட்டாதாயின் மறப்பதுதான் சாமி என்னுடைய நோக்கம்.

சாமி: எதனை மறப்பது?

சிவ: இல்வாழ்க்கையை.

சாமி: இல்வாழ்க்கையை ஏன் மறப்பான்?

சிவ: கிட்டாதபடியினாலேதான்.

சாமி: இல்வாழ்க்கையை அறவே விட்டுவிட்டுத் துறவியாவதா?

சிவ: ஆம் சாமி, தங்களைப்போல் துறவியாகிக் காலம் போக்கலாகுமே.

சாமி: துறவியாய் வாழ்தல் ஆண்களுக்கன்றிப் பெண்களுக்கு அவ்வளவு இலகுவல்ல, ஏனென்றால் பெண்பாலாருக்கு மற்றையவர்களுடைய பாதுகாப்பு வேணும்; அதனாற்றான் சொல்லுகிறேன்.

சிவ: அப்படியானால் "சிறை காக்குங் காப்பு எவன்செய்யும் மகளிர் நிறைகாக்குங் காப்பே தலை" என்று எங்கள் வள்ளுவர் சொன்னது என்ன சாமி? அல்லாமலும் திலகவதியாருடைய துறவு பாராட்டற்குரியதெனை எண்ணுகிறேன்'

சாமி: கேட்கிறேனென்று குறை எண்ணவொண்ணாது; உம்முடைய மைத்துனனையன்றி வேறு எந்தஆடவனையும் வரிப்பதில்லை யென்பதுதானே உம்முடைய கொள்கை?

சிவ: ஆம் சாமி, அதுதான் என்னுடைய நியதி; அதற்காகத்தான் திலகவதியாரை உதாரணமாக எடுத்துச் சொல்லுகிறேன்.

சாமி: நீர் சொல்வது நிசம்; ஆனால் உம்முடைய மைத்துனர் இப்பொழுது வேறொரு பெண்ணைத் தமக்கு வாழ்க்கைத்துணையாக்கியிருந்தால் நீர்என்ன செய்வீர்?

சிவ: அப்படி அவர்செய்திருந்தால் அச்செயல் அவரைப் பொறுத்தது நான் கொண்ட தூய நோக்கத்தை ஆண்டவனருளாற் கைக்கொண்டொழுகுவேன்: ஆனாலும், சாமி, அவர் இப்பொழுது உயிரோடிருக்கிறாரென்பதும், அப்படியிருப்பின் அவர் என்னையொழிய வேறு எவரையும் தம் வாழ்க்கைத் [illegible] மாட்டாரென்பதும் என் திட நம்பிக்கை" என்றுசொல்லிக் கண்களில் நீர்ததும்ப, சிவபாக்கியம் அதனைத் தன் முன்றானையால் ஒற்றிவிட்டு நிலத்தைப் பார்த்தவண்ணம் நின்றாள்.

'நீர் நினைத்தபிரகாரம்நடக்க ஆண்டவன் அருள்புரிவார். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மையுண்டாகப்பெறின்" என்ற வள்ளுவனார் வாக்கு நீர் அறியாததல்ல; உமக்கு நான் ஏதுஞ் சொல்லத்துணிந்தமை என்மேற் பிழை" என்று சாமியார் கூறிமுடித்தார்; சிவபாக்கியம் தன்னறையை நோக்கிச்செல்ல கண்ணகியம்மை மாத்திரம் கவலையோடு அங்கே நிற்றலும், சாமியார் ஒரு பொல்லாங்கும் வராது என்று சொல்லி அவளையுந் தேற்றினார். அன்று சாமியார் அங்கே தங்கிநின்று அடுத்தநாள் பாக்கியலட்சுமியும் தமது மகளுமிருக்கும் ஊருக்குப் புறப்பட்டார்.

### 'இது நான் செய்யவேண்டிய கடமை'

இவர்கள் விஷயம் இவ்வாறாக, பாக்கியலட்சுமி தனபாக்கியமென்னுமிவர்களுக்குத் துணையாகச் சென்ற சிவகுருநாதன் அவர்களுடைய வாசஸ்தானத்தையடைந்தவுடனே, விஜயரத்தினம் அவனைப் பெரிதும் உபசரித்து அன்புபாராட்டினான் "நான் உம்மைச் சிரமப்படுத்தி விட்டேன்" என்று விஜயரத்தினஞ் சொல்ல சிவகுருநாதன் "இது நான் செய்ய வேண்டிய கடமை" என்றான்; பாக்கியலட்சுமி தன்னையும் தனபாக்கியத்தையும் சிவகுருநாதனும் தாயாரும் சகோதரியும் அன்புபாராட்டி உபசரித்த வைபவத்தைத் தன் கணவனுக்குச் சொல்லி மகிழ்ந்தாள்; சிவகுருநாதன் முதலியோர் வாழும் வீட்டிற்குச் சாமியார்போன செய்தியையும், அவரைக் கண்ணகியம்மை முதலானோர் உபசரித்த விஷயத்தையும், அவர் யாத்திரை முடித்துக் கொண்டு மீண்டு அங்கு வருவதாகச் சொல்லி யாத்திரை போனதையும் இன்னபிற வரலாறுகளையும் கண்ணகியம்மையும் சிவபாக்கியமும் தனக்குச் சொன்னார்களென்று பாக்கியலட்சுமி தன கணவனுக்குச் சொன்னாள், தனபாக்கியத்தின் குணங்கள் செயல்கள் ஊடாட்ட [illegible]வைகளைக் கண்ணகியம்மை, சிவபாக்கியமென்னு மிவர்கள பெரிதும் பாராட்டினார்களென்றும் பாக்கியலட்சுமி தன் கணவனுக்குச் சொன்னாள்; இவைகளை யெல்லாங் கேட்டு விஜயரத்தினம் அதிக மகிழ்ச்சியும் வியப்புங் கொண்டான்; சிவகுருநாதன் மீண்டு தங்கள் வாசஸ்தானத்திற்குப் புறப்படவேண்டுமென்று சொல்லுதலும், கேட்ட விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும் அவரை "இன்று நின்று, நாளை போகலாம்" என்று தடுக்க, அவன் அப்படியே அடுத்தநாட் புறப்படுவதாக நிச்சயித்துக்கொண்டு அங்கேயிருந்தான்; இங்ஙனமாக, யாத்திரை செய்யச் சென்ற சாமியாரும் அன்றிரவுமீண்டு ஆங்கே போய்ச் சேர்ந்தார். (வரும்)


# கிருஷ்ணன் றாது

## சருக்கவுரை

வில்லிபாரதம்—உத்தியோக பருவத்துள்ளதாகிய கிருஷ்ணன் றாது சருக்கம், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய பொழிப்புரை சரித்திரத்தொடர்பு,நூலாசிரியர்வரலாறு என்னுமிவற்றுடன் யாழ்ப்பாணம் நாவலர் கலாசாலைத் தலைமையாசிரியர் வித்துவான் ந சுப்பையபிள்ளை யவர்கள் எழுதிய விசேடக் குறிப்புரையுஞ் சேர்த்து ஐந்தாம் பதிப்பாக அச்சிட்டு வெளிவந்துளது; இச்சருக்கத்திற்சிலபாகம் இப்பொழுதுதமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸீ பரீட்சைக்குப் பாடமாக விதிக்கப்பட்டுள்ளன

விலை 1 ரூபா 75 சதம் (ரூபா 1 அணா 12)

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை

வண்ணார்பண்ணை :: யாழ்ப்பாணம்

20—10—47.



ஆசிரியர்களுக்கும், ஆசிரிய மாணவர்களுக்கும்

இன்றியமையாத

# "பரீட்சித்தலும் புள்ளியிடுதலும்"

திரு. எஸ் சிதம்பரப்பிள்ளை B.A, B.Sc.

அவர்களால் எழுதப்பட்டது

கீழ்க்காணும் இடங்களிற் பெறலாம்   விலை ரூ. 1-50

(1) பி.எஸ்.திருச்செல்வம் அண்டுகோ
ஆஸ்பத்திரி றோட்.
யாழ்ப்பாணம்.

(2) கொழும்பு புக் சென்டர்,
20, பார்சன்ஸ றோட்
கோட்டை, கொழும்பு,

Mis 188 25-11-47


## பீ. ஏ. பட்டதாரிகள்


மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பலகாலமாகப் போதகாசிரியராகஇருந்துவருபவரும், யாழ்ப்பாணம் ஹிந்து மகாசபைத் தலைவருமான திரு. சி. நாகையா அவர்கள் சமீபத்தில் நடைபெற்ற லண்டன் சர்வகலாசங்க பீ ஏ. பரீட்சையில் சித்தியெய்தியுள்ளார் என்று அறிகிறோம்,

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப்பிரதமாசிரியராகப் பலகாலம் கடமை பார்த்து, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிப் பிரதமாசிரியராகக்கடமையாற்றி இளைப்பாறியுள்ள ஸ்ரீ மு. சபாரத்தினசிங்கம் அவர்களின் இரண்டாம் புதல்வியும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் போதகாசிரியர் ஸ்ரீ எஸ் ஜெயவீரசிங்கம் B. A அவர்களின் கனிஷ்டசகோதரியுமான சௌ. பொன்மணி ஷை பீ. ஏ. பரீட்சையில் சித்திபடைந்துள்ளனர் என்று அறிகிறோம். சௌ பொன்மணி யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில் ஆசிரியையாவர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியராகவிருந்து இளைப்பாறியுள்ள ஐயனார் கோவிலடி திரு. இ நாகலிங்கம் அவர்களின் புத்திரனும், கொழும்பு பகிரங்க வேலைப்பகுதியில் கிளெறிக்கல் உத்தியோகத்தராக விருப்பவருமான ஸ்ரீ என். மகேசன் அவர்கள் சமீப காலத்தில் நிகழ்ந்த லண்டன் பீ. எஸ். ஸி. பரீட்சையிற் சித்தியடைந்துள்ளார் என்று அறிகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் சங்கீதக் கருவிகள் பழுதடைந்துவிட்டனவா?



அப்படியானால் உடனே எம்மிடம் கொண்டுவாருங்கள்
3 வருட உத்தரவாதத்துடன் புத்தம்புதிதாய் பழுதுபார்த்துத் தருகிறோம்

[ எவ்வித நிலைமையில் உள்ளதாயினும் சரி கட்டணம் வெகு சகாயம் ]

கல்சற்றுமோகன்புளூட் ஹார்மோனியக் கம்பெனி,
சிவலிங்கப்புளியடி, 484, K. K. S. றேட், யாழ்ப்பாணம்.

Std 34 12—9—47 To 9—12—47. (F)

## சைவக் கிரியை விளக்கம்

இது சைவ நன்மக்கள் தாம் செய்யும் சமயக் கிரியைகளின் உட் கருத்தையும், நோக்கங்களையும் எடுத்து இலகுவில் விளக்கும் தமிழ் வசன நூலாகும், இதனை எழுதியவர்:

**ஆசிரியர், திரு. சு. சிவபாதசுந்தரம், (B.A.) அவர்கள்**

இதன் இரண்டாம் பதிப்பு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் வெளியீடாக வுள்ளது.

விலை சதம் 50 (8 அணா)

வண்ணார்பண்ணை 4-11-47

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாசயந்திரசாலை

## மலேயாவுக்குக் கப்பல் பிரயாணம்

யாழ்ப்பாணம்—சென்னபட்டணம—பினாங்—சிங்கப்பூர்

சென்னபட்டணம் மார்க்கம் பினாங், சிங்கப்பூருக்கு மாதம் இருமுறையும் நேரே சிங்கப்பூருக்கு ஒருமுறையும் வசதிகளடங்கிய,

கப்பல் பிரயாணச் சீட்டு

எம்மூலம் 1947 நவம்பர் மாதம் தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்

எஸ். ஆர். எஸ். நாதன்
21/3, ஸ்ரான்லி றேட் :: யாழ்ப்பாணம்

Std 22. 6-6-47—6-6-48

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
நெ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48

## தந்தரோக சஞ்சீவி
### கந்தசாமி வைத்தியர்
### சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும், மூரசுவளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் சும்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்

வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30-6-48 (...)

## இலங்கைவங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

### இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்.- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்வின் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கினேஸ வங்கி,
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிறேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

(Std.29 1-8—30-7-48)

## மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக
# கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச் செலவு எல்லாம் உட்பட, நாகபட்டனமிருந்து பினாங் செல்ல டெக் ரிக்கற் ரூபா 130-க்கு எங்கள்மூலமாக பெற்றுக்கொள்ளலாம்

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

பல நூற்றுக் கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ் செய்து திருப்தியடைந்துகொடுத்த நற்சாட்சிகள் அநேகமுண்டு.

**வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்**

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன் கோ,
252, காங்கேசன்துறை றேட், :: சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்
தந்தி (Srivel) :: :: பிராஞ்சு: நாகபட்டணம்.

3) 2—9—47&28-2-48

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Friday. November 28. 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org